# செயலாராய்ச்சி அறிக்கை 2024

## உயர் தொடக்க நிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்துதல்


**கே.திருமகள்**

**அறிவியல் பட்டதாரி அசிரியை**

**ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,**

**காதப்பள்ளி**

**நாமக்கல் ஒன்றியம்,**

**நாமக்கல் – 637001**

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**நாமக்கல் - 637001**


**மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**சென்னை – 600006**

**மாவட்டஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - நாமக்கல்**

**செயல் ஆராய்ச்சி அறிக்கை – 2024**

**உயர் தொடக்க நிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்துதல்**

**ஆய்வாளர்**

**கே. திருமகள்**

**அறிவியல் பட்டதாரி ஆசிரியை**

**ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,**

**காதப்பள்ளி,**

**காதப்பள்ளி ஒன்றியம்,**

**நாமக்கல்.637001.**

## சான்று

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஒன்றியம், காதப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் படிக்கும் உயர் தொடக்கநிலை மாணவர்களுக்கு **"மூலிகை தோட்டம் அமைத்தல்"** என்ற தலைப்பில் பட்டதாரி ஆசிரியை (அறிவியல்) திருமதி.கே.திருமகள் பி.எஸ்.சி.,பி.எட்., அவர்களால் உருவாக்கப்பட்ட நம்பகமான செயலாராய்ச்சி என சான்று அளிக்கப்படுகிறது.

முதல்வர்

மாவட்ட ஆசிரியர்
கல்வி
மற்றும் பயிற்சி
நிறுவனம்
நாமக்கல்.

இடம் : நாமக்கல்
நாள் : .2024

கே.திருமகள்
பட்டதாரி ஆசிரியை (அறிவியல்)
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
காதப்பள்ளி,
நாமக்கல் - 637001.

**உறுதிமொழி**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஒன்றியம், காதப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியை (அறிவியல்) திருமதி.கே.திருமகள் ஆகிய நான் உயர் தொடக்கநிலை மாணவர்களுக்கு **"மூலிகை தோட்டம் அமைத்தல்"** என்ற தலைப்பில் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஒன்றியம், காதப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் படிக்கும் உயர் தொடக்கநிலை மாணவர்களுக்கு முனைவர் திரு. தேவராஜ், முதுநிலை விரிவுரையாளர், மா.க.ஆ.க.ப. நிறுவனம், நாமக்கல் அவர்களின் வழிகாட்டுதலுடன் இந்த செயலாய்வு மேற்கொண்டேன் என உறுதி அளிக்கிறேன்.

வழிகாட்டி ஆசிரியர்
செயலாராய்ச்சியாளர்
கையொப்பம்.
கையொப்பம்.

## <u>நன்றியுரை</u>

**"உயர் தொடக்கநிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைத்தல்"** என்ற தலைப்பில் செயலாராய்ச்சி மேற்கொள்ள வழிவகை செய்த மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் மற்றும் துறை இயக்குநர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். செயலாய்வு குழுவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்செயல் ஆய்வை மேற்கொள்வதற்கு அனுமதியளித்து வழிகாட்டியாக இருந்த நாமக்கல் மாவட்ட ஆசிரியர் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனம் முதல்வர், கல்வியாளர்கள் மற்றும் வழிகாட்டி ஆசிரியர் முனைவர் திரு. தேவராஜ், முதுநிலை விரிவுரையாளர், மா.க.ஆ.க.ப. நிறுவனம், நாமக்கல் ஆகியோர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாய்வு களப்பணி சிறக்க பல வகையிலும் உறுதுணையாக இருந்த காதப்பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.இரா.மோகன், பி.எஸ்.ஸி., பி.எட்., அவர்களுக்கும் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் : காதப்பள்ளி
கே.திருமகள் நாள் :

## பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | |
| 2. | ஆய்வின் தேவை | |
| 3. | பிரச்சனை வரையறை | |
| 4. | பிரச்சனைக்கான காரணங்கள் | |
| 5. | செயல் ஆய்வின் நோக்கம் | |
| 6. | ஆய்வு செய்த முறை | |
| | அ) கருதுகோள் | |
| | ஆ)ஆய்வு மாதிரி | |
| | இ) ஆய்வு கருவி | |
| | ஈ) செயல் முறை | |
| | செயல்பாடு – 1, 2 | |
| 7. | புள்ளியியல் பகுப்பாய்வு | |
| 8. | கல்வியியல் தாக்கங்கள் | |
| 9. | ஆய்வு முடிவுகள் | |
| 10. | மேற்கோள்நூல் கள் | |
| 11. | இணையதள முகவரி | |
| 12. | பயிற்சி முன் - பின் தேர்வு வினாத்தாள் | |


**முன்னுரை :**

மாணவர்கள் மூலிகைகளை பயிரிடும் தோட்டம் மூலிகை தோட்டம் ஆகும். உணவுக்கு மருந்துக்கு, நறுமணத்துக்கு மூலிகைகள் பயன்படுகின்றன. குறிப்பாக

சித்த மருத்துவம் பல்வகை மூலிகைகளை பயன்படுத்துகிறது.

வீட்டில் சிறு மூலிகை தோட்டம் செய்தால் விலை உயர்வு மிக்க மருந்துகளை தவிர்க்கலாம்.

இன்றைய நவீன யுகத்தில் வரவிருக்கும் அசுத்தமான நோய்களிலிருந்து நம்மை நாமே பாதுகாத்து கொள்ள வேண்டியது அவசியம். மூலிகைத் தாவரங்களை நம் உணவு மற்றும் வாழ்வியல் முறைக்குள் விருந்தோம்பும் பண்புடன் வரவேற்பதே தெளிவு.

நாம் விரும்பி உயிர் கொடுத்த மூலிகைத் தோட்டம் மருந்தாகப் பயன்படுவது மட்டுமல்லாமல், நச்சுத்தன்மையுடைய காற்றை புனிதமாக்கி, வாழும் வீட்டைச் சுற்றி இயற்கையான மூலிகை வாசனையைப் பரப்பி நம் உள்ளத்தை உற்சாகப்படுத்தும். வெளியேறும் தாவர சுவாசத்துடன் நம் சுவாசமும் தங்குதடையின்றி உறவாடுவதன் காரணமாக உடலிலும் மனதிலும் உள்ள பல நோய்கள் ஆகாயத்தோடு சலனமின்றி கலந்துவிடும். தினமும் சிறிது நேரம் தாவரங்களுடன் செலவிடுவதன் மூலம் சோர்வடைந்த மனமும் உடலும் புத்துணர்ச்சி அடைவது உறுதி.

எனவே உயர் தொடக்க நிலை மாணவர்களை 'மூலிகை தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்த ஆய்வாளரின் இச்செயலாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் தேவை :**

மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைக்கும் பயிற்சியின் மூலம் கலைத்திறன்களை மேம்படுத்துவதற்கும் வீடுகள், பள்ளிகள், பொது இடங்களில் மூலிகை தோட்டம் அமைக்கும் திறனில் ஆர்வத்தை தூண்டுவதற்கும், மூலிகையின் பயன்களை தெரிந்து கொள்வதற்கும், நல்ல ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், மூலிகை தோட்டம் அமைத்தல் அவசியம் இருப்பதாலும் இந்த செயல் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

மாணவர்களின் படைப்பாற்றல் திறன், சிந்திக்கும் திறன், கற்பனை திறன்கள், வளர்த்து உடலையும், மனதையும் ஒருமுகப்படுத்துவது இதன் பயிற்சியாகும். ஆகையால் இந்த செயலாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

**பிரச்சனை வரையறை :**

உயர் தொடக்க நிலை மாணவர்கள் மூலிகை தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்த பல்வேறு தோட்டம் அமைக்கும் முறைகள், எவ்வாறு தோட்டம் அமைப்பது அதற்கு தேவையான தொட்டிகள், மண் வகைகள், செடிகள், குப்பைகள் போன்ற பொருட்களை பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் வடிவமைக்கப்படும் செயல்பாடுகள் மூலம் தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்த இயலும்.

**பிரச்சனைக்கான காரணங்கள் :**

1. மாணவர்கள் தோட்டம் அமைப்பதில் ஆர்வம் இல்லாமல் இருக்கலாம்.
2. பள்ளிக்கு தொடர்ச்சியாக வருகை புரியாமல் இருக்கலாம்.
3. தோட்டம் அமைத்தலில் முன் அனுபவம் இல்லாமை.
4. செடிகளை தேர்ந்தெடுப்பதில் கவனம் இல்லாமல் இருக்கலாம்.
5. எந்த மாதிரியான தொட்டியில் செடிகளை நடுவது என்பதில் திறன் இல்லாமல் இருக்கலாம்.
6. மூலிகைச் செடிகள் எவை என்பது தெரியாமல் இருக்கலாம்.
7. குழுக் களந்துரையாடல் இல்லாமல் இருக்கலாம்.
8. முன் அனுபவம் இல்லாமல் இருக்கலாம்.

**ஆய்வின் நோக்கம் :**

1. மாணவர்களுக்கு மூலிகைத் தோட்டம் அமைக்கும் ஆர்வத்தை தூண்டுதல்
2. தோட்டம் அமைக்கும் பயிற்சி பெறுதல்
3. தோட்டம் அமைக்கத் தேவையான மூலிகை இடம் மற்றும் செடிகளைத் தேர்வு செய்து தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்துதல்
4. மாணவர்களின் சிந்திக்கும் திறன், கற்பனை திறன் மற்றும் படைப்பாற்றல் திறனை வளர்க்கவும்,

மாணவர்களின் உடலையும், மனதையும் ஒருமுகப்படுத்தவும் தோட்டம் அமைக்கும் பயிற்சியை பெறுதல்.

5. மூலிகை தோட்டம் அமைக்கும் போது ஏற்படும் சிக்கலான மற்றும் கடினமான இடர்பாடுகளை தீர்த்தல்.

**ஆய்வு செயல்முறை :-**

**கருதுகோள் :-**

உயர் தொடக்க நிலை மாணவர்கள் மூலிகை தோட்டம் அமைத்தலில் தகுந்த பயிற்சி மற்றும் எளிமையான வழிகாட்டுதலின் மூலம் முன் தேர்வை விட பின் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவார்கள்.

**ஆய்வின் மாதிரி :**

இச்செயலாய்விற்கு நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஒன்றியம், காதப்பள்ளி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் படிக்கும் 22 மாணவ மாணவிகளை செயல் ஆய்வுக்கு மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

**ஆய்வு கருவி :**

மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைப்பதற்கு நேரடி பயிற்சி தொடுப்பதன் மூலம், லுழர வுரடிந ஊhயnநெட-லில் ஏனைநழ காட்சிகள் பார்த்தும் பயிற்சிக்கு முன் தேர்தலில் எழுதியதை விட பயிற்சிக்கு பின் தேர்வில் நன்றாக எழுதுவார்கள். இத்தேர்வில் 50 மதிப்பெண்களுக்கு வினாத்தாள் பயன்படுத்தப்பட்டது.

## செய்முறை

**செய்முறை : 1**

செடிகளின் மண் கலவை அளவு 1 பங்கு, செம்மண் (அ) தோட்டமண் 1 பங்கு மக்கிய சாணம்

வேப்பம் புண்ணாக்கு 50 கிராம் இதை மூன்றையும் ஒன்றாக கலந்து 5 நாட்கள் அப்படியே வைத்திருந்தால் பின் மண்ணாக மாறும் மண் வளமான, பின் அதில் செடிகளை நட்டு நீர் விட்டு வளர்த்தால் செடிகள் நன்றாக வளரும்.



செய்மு

15 நாளில் கிச்சன் வேஸ்ட் கம்போஸ்ட் ரெடி பண்ணுவது எப்படி காய்கறி கலவையை வீணாக்காமல் உரமாக மாற்ற சிறிய வழி

1 பாட்டிலில் காய்கறி 1 லேயர் மண் 1 லேயர் தினமும் போட்டு நீர் ஊற்றி 15 நாட்கள் வைத்திருந்து அதை செடிகளுக்கு போட்டால் செடி வளர்ச்சி நன்றாக இருக்கும்.

**செய்முறை : 3**

**<u>பூச்சி விரட்டி :</u>**

இலைப்பேன்கள் புதுத் தளிர் இலையில் வரும். இதற்கு ஒரு செய்முறை. ஒரு பாட்டிலில் ஐஸ் வாட்டரை ஊற்றி அதை இலைகளின் மேல் தெளித்தால் 1 வாரத்திற்குள் பூச்சிகள் வராமல் தடுக்கலாம்.




**செய்முறை : 4**

**<u>தேங்காய் பிரிக்ஸ் தயாரிக்கும் முறை)</u>**

கோகோ பிட் என்பது தேங்காய் நார் கலவை தேங்காய் நார் கோகோ பிட்ஸ் பிரிக்ஸை நீரில் ஊற வைத்து பின் அதை மண்ணில் கலக்கவும் செடிகளை ஈரப்பதத்தை தக்க வைப்பதற்கு இது பயன்படுகிறது.




**செய்முறை :**

செடிகள் பசுமையாக இருக்க

செடிகளுக்கு DAP உரமாக குறைந்து 20 ball அளவுக்கு Cornel-ல் போட்டு நீரை ஊற்றவும். இதை 15 நாட்களுக்கு ஒரு முறை போடவும்.



**செய்மு**

**<u>புதினா வளர்க்க 5 டிப்ஸ்</u>**

Sun Light-ல் வைத்து வளர்க்கவும்
மண் கலவை செம்மண், கோகோ பிட்
மாட்டுச்சானம் - 15 நாட்களுக்கு 1 முறை
புளித்த மோரை மண்ணில் - 15 நாட்களுக்கு 1 முறை ஊற்ற வேண்டும். இதன் மூலம் மண்ணில் நுண்ணுயிரிகள் அதிகமாகும் ஊட்டச்சத்து கிடைக்கும்.



**புள்ளியியல் ப**


மாணவர்க ... பெற்ற மதிப்பெண்கள் ... வரங்கள் கீழ்கண்ட அட்ட...

| வரிசை எண் | மாணவர்கள் பெயர் | முன்தேர்வு | | பின்தேர்வு | |
|---|---|---|---|---|---|
| | | மதிப்பெண் (50) | சதவீதம் | மதிப்பெண் (50) | சதவீதம் |
| 1. | து. ஜெயபிரகாஷ் | 12 | 24 | 30 | 60 |
| 2. | ர.விஜய் | 13 | 26 | 26 | 52 |
| 3. | கோ.ரோகித் | 14 | 28 | 25 | 50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | ம.கிஷோர் | 25 | 50 | 40 | 80 |
| 5. | ச.ரித்திக் | 27 | 54 | 35 | 70 |
| 6. | மோ. புருஷோத்தமன் | 19 | 38 | 37 | 74 |
| 7. | சு. ராகவேந்திரன் | 40 | 80 | 46 | 92 |
| 8. | கு.தன்வந்த் | 38 | 76 | 45 | 90 |
| 9. | மா.சேதபதி | 15 | 30 | 32 | 64 |
| 10. | ச.ஜெகதீஷ் | 14 | 28 | 33 | 66 |
| 11. | தே.ஹரிபிரசாத் | 16 | 32 | 31 | 62 |
| 12. | ஆ.நிஷா | 20 | 40 | 34 | 68 |
| 13. | மா.மோனாஸ்ரீ | 26 | 52 | 39 | 78 |
| 14. | ச.ஸ்ரீநிதி | 18 | 36 | 30 | 60 |
| 15. | மூ.கோகுலபிரியா | 18 | 36 | 26 | 52 |
| 16. | சே.அனிதா | 26 | 52 | 40 | 80 |
| 17. | கா.யாழினி | 13 | 26 | 25 | 50 |
| 18. | ச.சு.கீர்த்தி | 30 | 60 | 40 | 80 |
| 19. | செ.லக்ஷிதா | 19 | 38 | 38 | 76 |
| 20. | செ.சரிதா | 33 | 66 | 43 | 86 |
| 21. | ச.நர்மதா | 32 | 64 | 44 | 88 |
| 22. | செ.சுபாஸ்ரீ | 31 | 62 | 45 | 90 |

**பட்டை விளக்கப்படும் :**


முன்தேர்வு மற்றும் பின்தேர்வு மதிப்பெண்கள் ஒப்பீடு:-



முன்தேர்வு மற்றும் பின்தேர்வு கூட்டுசராசரி

| விவரம் | சதவீதம் |
|---|---|
| முன்தேர்வு | 44% |
| பின்தேர்வு | 79% |

**பட்டை விளக்கப்படும்**




இ ... களின் முன்தே ... கூட்டு சராசரி மதிப்பெண் பெற்றுள்ளனர். மாணவர்கள் முன் தேர்வை விட பின் தேர்வில் கூட்டு சராசரி மதிப்பெண்

கூடுதலாக பெற்றுள்ளனர் என்பதை இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

**கல்வியியல் தாக்கங்கள் :**

1. மாணவர்களிடம் தோட்டம் அமைப்பதில் ஆர்வம் அதிகரித்துள்ளது.
2. மூலிகை தாவரங்களின் பெயர்களை தெரிந்து கொள்வதில் ஆர்வம் அதிகரித்துள்ளது.
3. மூலிகைத் தாவரங்களை தங்கள் வீடுகளிலும் வளர்க்க ஆர்வம் உண்டாகிறது.
4. அறிவியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறும் நம்பிக்கை அதிகரித்துள்ளது.
5. மூலிகையின் பயன்களையும் தெரிந்து கொள்வதில் ஆர்வம் அதிகரித்துள்ளது.

**பரிந்துரைகள் :**

உயர் தொடக்க நிலை மாணவர்கள் அறிவியல் பாடங்களில் வரும் மூலிகை தாவரங்களைப் பற்றி ஏற்படும் சந்தேகங்களுக்கும் மூலிகை தோட்டம் எவ்வாறு அமைத்து பாதுகாக்க மேற்கொள்ளும் திறனை மேம்படுத்த இந்த செயல் ஆராய்ச்சி பரிந்துரைக்கப்படுகிறது.

**ஆய்வின் முடிவுகள் :**

1. மாணவர்கள் தோட்டம் அமைப்பதில் ஆர்வமுடன் பங்கேற்கின்றனர்.
2. இந்த செயலாராய்ச்சியின் மூலம் மாணவர்கள் பள்ளி வருகையை அதிகரித்துக் கொண்டனர்.
3. மாணவர்களிடையே தோட்டம் அமைக்கும் திறன் அதிகரித்துள்ளது.
4. மாணவர்களிடையே குழு கலந்துரையாடல் மூலம் நம்மிடையே இடர்பாடுகளை நீக்கி கற்றல் உத்திகளை கையாளுகின்றனர்.
5. மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டு பன்முகத் திறன்களை வளர்த்துக் கொண்டனர்.

**மேற்கோள் நூல்கள் :**


1. பசுமை தமிழகம் - விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் தகவல்கள்
2. வீட்டிலேயே மூலிகை தோட்டம்
3. மருத்துவ தாவரங்கள் பாதுகாப்பு மற்றும் நிறுவன மேம்பாடு


**இணையதள முகவரி :**


| | | |
|---|---|---|
| Youtube.com | - | Ruba Ganden |
| Wikipidia | - | https/ www.wikipedia |
| Britannica | - | https/www.britannica.co |
| | | smidskk@gmail.com |
| | | https:/smids.orgs.in_smids.org. |


**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - நாமக்கல்**

**செயலாராய்ச்சிக்கு முன் - பின் தேர்வு வினாத்தாள்**

**தலைப்பு : உயர் தொடக்க நிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்துதல்**

**ஆய்வாளரின் பெயர் :-** கே.திருமகள் அறிவியல் பட்டதாரி ஆசிரியர்
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி காதப்பள்ளி
நாமக்கல் ஒன்றியம், நாமக்கல் - 637019.

**மாணாக்கர்களின் பெயர் :-**
**வகுப்பு :-** உயர் தொடக்க நிலை மாணவர்கள்

**மொத்த மதிப்பெண்கள் : 50**

**I. சிறுவினா :-** 5x 2= 10

1. தோட்டம் அமைக்க எந்த வகையான மண் தேவை ?
2. உற்பத்தி திறனை பராமரிக்க சிறந்த பொருள் எது?
3. மூலிகை தோட்டத்தை பராமரிக்கும் மதிப்பு மிக்க பொருட்கள் யாவை?
4. மூலிகைத் தாவரம் வளர தேவையானவை எவை?
5. வீட்டில் வளர்க்க வேண்டிய மூலிகை தாவரங்கள் எவை?

II. பொருத்துக. 5 x 2= 10

1. துளசி - கல்லீரல் வலுப்பபடும்
2. வல்லாரை - சளி குணமாகும்
3. அருகம்புல் - கண் பார்வை கூர்மையாகும்
4. பொன்னாகண்ணி - இரத்த ஓட்டம் சீராகும்
5. கரிசலாங்கண்ணி - உடல் சூடு தனியும்

III. வீட்டில் வளர்க்க வேண்டிய 5 மூலிகை செடிகளின் பெயர்களை 5 x 2= 10 எழுதுக?

IV. படங்களைப் பார்த்து பெயர்களை எழுது?

5 x 4 =20

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - நாமக்கல்**

**செயலாராய்ச்சி சுருக்கம் - 2024**

**தலைப்பு** : உயர் தொடக்க நிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்துதல்

**பள்ளியின் பெயர்**
**மற்றும் முகவரி** : ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
காதப்பள்ளி, நாமக்கல் ஒன்றியம்,
நாமக்கல் - 637019.

பாடம் : அறிவியல்

**முன்னுரை :**

மூலிகைகள் நீண்ட காலமாக அவற்றின் சமையல் மற்றும் சிகிச்சை தன்மைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. மூலிகைகள் பல்வேறு உணவுகள்

மற்றும் பானங்களுக்கு தனித்துவமான சுவைகளை சேர்க்கின்றன. மூலிகை மருத்துவர்கள் அவற்றின் மருத்துவ குணங்களுக்காக குறிப்பிட்ட பூக்கள் இலைகள் மற்றும் வேர்களை பாராட்டுகிறார்கள்.

மூலிகைகள் அவற்றின் வீரியம், பராமரிப்பின் எளிமை மற்றும் உள்ளார்ந்த பூச்சி எதிர்ப்பு உள்ளிட்ட அனைத்து அற்புதமான பண்புகளுக்காகவும் தோட்டக்காரர்களால் கூடுதலாக அவர்கள் எதிர்பாராத இடங்களில் அதிர்ச்சியூட்டும் நேரடி நிறுவல்களை உருவாக்குகிறார்கள்.

மூலிகை தோட்டத்தை உருவாக்குவதன் மூலம் மாணவர்கள் தங்கள் சொந்த உணவை எவ்வாறு வளர்ப்பது என்பதை எளிதில் கற்றுக் கொள்ளலாம். பல மூலிகைகள் தயாரிக்க எளிதானது.

விதையிலிருந்தும் (கொத்தமல்லி) வருடாந்திர மூலிகைகளை தொடங்க முயற்சிக்கவும் மூலிகைகளை பராமரிப்பது தினசரி பணியாக மாணவர்களுக்கு உருவாகும். மாணவர்கள் தங்களது சொந்த முயற்சியில் செடிகளை வளர்ப்பது சொந்த மூலிகைகளை வளர்ப்பதன் நன்மைகள் அதன் நன்மைகள் பலவற்றை மாணவர்கள் அறிந்து கொள்வது. மேலும் தோட்டம் அமைத்தல் வாழ்நாள் முழுவதும் ஆர்வமாக மாறும்.

**ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் :**

உயர் தொடக்க நிலை மாணவர்கள்

**பிரச்சனையை கண்டறிந்த விதம் :**

உயர் தொடக்க நிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைப்பது எவ்வாறு என்பதில் மாணவர்களுக்கு தெரியாமல் இருந்திருக்கும். ஏனெனில் பல மாணவர்கள் தோட்டம் அமைப்பதில் ஈடுபாடு இல்லாமல் இருந்தனர். இந்த செயலாராய்ச்சியின் மூலமாக மாணவர்கள் தோட்டம் அமைப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதால் மாணவர்கள் தங்கள் திறனை பயன்படுத்த ஆய்வாளரின் இந்த செயலாராய்ச்சி வழிகாட்டுகிறது.

**செயலாய்வின் நோக்கங்கள் :**

1. மாணவர்களுக்கு தோட்டம் அமைப்பதில் ஆர்வத்தை தூண்டுதல்
2. செடிகளை வளர்ப்பதில் பயிற்சி பெறுதல்
3. புதிய உத்திகளை கையாளுதல்
4. மாணவர்களின் படைப்பாற்றல் திறன், சிந்திக்கும் திறன் மற்றும் கற்பனை திறன்களை வளர்க்கவும் மாணவர்களின் உடலையும், மனதையும் ஒருமுகப்படுத்தவும் தோட்டம் அமைக்கும் பயிற்சியை பெறுதல்.
5. தோட்டம் அமைக்கும் போது ஏற்படும் கடினமான சிரமங்களை தீர்த்தல்.

**செயல்பாடுகள் :**

உயர் தொடக்க மாணவர்களுக்கு தோட்டம் அமைக்கும் ஆர்வத்தை தூண்ட பலவகையான மூலிகை செடிகளை நடச் செய்து மாணவர்களின் திறன் மேம்படுத்தப்படுகிறது.

**முடிவுகள் :**

மாணவர்கள் மூலிகை தோட்டம் அமைத்தலில் பயிற்சி பெற்று ஆர்வமுடன் செடிகளை நடவு செய்தனர். இதனால் மாணவர்களின் தினசரி வருகையை அதிகரித்து தோட்டம் அமைக்கும் திறன்களை பயன்படுத்திக் கொண்டனர்.

தோட்டம் அமைப்பதில் ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர்.

மாணவர்கள் குழுக் கலைந்துரையாடல் மூலம் தோட்டம் அமைக்கும் திறனை மேம்படுத்தி பல கற்றல் உத்திகளை கையாள்கின்றனர்.

**கல்வியில் தாக்கங்கள் :**

1. தோட்டம் அமைப்பதில் ஆர்வம் காட்டுதல்
2. மூலிகைகளை தெரிந்து கொள்ளுதல்
3. மருத்துவ தாவரங்கள் மற்றும் பயன்களை தெரிந்து கொள்ளுதல்
4. விவசாயத்தில் ஆர்வம் காட்டுதல்
5. பிற்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைதல்

**கருத்துரைகள் :**

உயர் தொடக்க நிலை மாணவர்களுக்கு மூலிகை தோட்டம் அமைத்தல் மூலம் மாணவர்கள் மூலிகை மற்றும் அதன் பயன்களை அறிந்து மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த இந்த செயல் ஆராய்ச்சி பரிந்துரைக்கப்படுகிறது.

**புகைப்படங்கள் :**

**முன் தேர்வு**



## பின் தேர்வு



## புகைப்படங்கள் :








04:34
56%











